




500க்கும் அதிகமான இஸ்லாமியக் கல்வி நிறுவனங்களின் குரலாக ஒலித்து வருகிற 'தமிழ்நாடு இஸ்லாமியக் கல்வி நிறுவனங்களுக்கான கூட்டமைப்பு' – Organization Of Muslim Educational Institutions & Associations Of Tamil Nadu (OMEIAT)–ன் பொன் விழா ஆண்டு நிகழ்ச்சிகளை சென்னை புதுக்கல்லூரியில் நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இக்கூட்டமைப்பின் சார்பில், 12 இஸ்லாமிய கல்வி அறிஞர்கள் உட்பட 13 ஆளுமைகளுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை வழங்கி, இஸ்லாமிய மக்களுக்கும் அவர்களின் கல்விக்கும் OMEIAT மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு கழக அரசு என்றும் துணை நிற்கும் என்று உரையாற்றினார். OMEIATன் கல்விச்சேவை இன்னும் பல நூறாண்டுகள் தொடர வாழ்த்தினார்.

## "எல்லோருக்கும் கல்வி கொடுக்கப்பட வேண்டும்" எனும்

# நபிகள் வாக்கினைத்தான் தி.மு.கழகம் நிறைவேற்றி வருகிறது!

## தமிழ்நாடு இஸ்லாமியக் கல்வி நிறுவனங்களுக்கான கூட்டமைப்பு பொன்விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை,பிப்.2-**

**சென்னை ராயப்பேட்டை புதுக்கல்லூரியில், `தமிழ்நாடு இஸ்லாமியக் கல்வி நிறுவனங்களுக்கான கூட்டமைப்பு' - Organization Of Muslim Educational Institutions & Associations Of Tamil Nadu (OMEIAT)-களின் பொன் விழா ஆண்டு நிகழ்ச்சிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

**விழாவில், இக்கூட்டமைப்பின் சார்பில், 12 இஸ்லாமிய கல்வி அறிஞர்கள் உட்பட 13 ஆளுமைகளுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை வழங்கிச் சிறப்புரை யாற்றினார்.**

**அப்போது அவர் இஸ்லாமிய மக்களுக்கும் அவர்களின் கல்விக்கும், ஓமியத் கூட்டமைப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு கழக அரசு என்றும் துணை நிற்கும் என்றும் குறிப்பிட்டார்.**

**நிகழ்ச்சியில் துணை முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

இஸ்லாமிய கல்வி நிறுவனங்கள் கூட்டமைப்புகளின் பொன் விழா ஆண்டு நிகழ்ச்சிகளை இன்று தொடங்கி வைப்பதில் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க பொன் விழா ஆண்டு நிகழ்ச்சியில் பங்கேற்க, எனக்கு வாய்ப்பு அளித்த, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும் மனிதநேய மக்கள் கட்சியின் தலைவருமான ஜவாஹிருல்லா அவர்களுக்கும், இந்தக் கூட்டமைப்பின் அனைத்து நிர்வாகிகளுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புதுக்கல்லூரி எனக்குப் புதிதல்ல!**

இங்கு அனைவரையும் அறிமுகப்படுத்தி வரவேற்ற அருமைச் சகோதரி அவர்கள் பேசும்போது, "முன்னாள் பிரதமர்கள் இந்திராகாந்தி அம்மையார், ராஜீவ் காந்தி ஆகியோர் புதுக்கல்லூரிக்கு வந்திருக்கின்றனர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் வந்திருக்கின்றார், நம் முதலமைச்சர் அவர்களும் வந்திருக்கிறார். அவர்களின் வழியில், இன்று துணை முதல்வர் உதயநிதி வந்துள்ளார்" எனக் குறிப்பிட்டார். ஏதோ நான் முதல் முறை இந்தக் கல்லூரி வளாகத்திற்கு வருவதுபோல அவர் என்னை வரவேற்று இருக்கிறார். அதில் ஒரு சின்னத் திருத்தம். நான் வருடத்திற்கு குறைந்தது இரண்டு முறை, மூன்று முறையாவது இதே புதுக் கல்லூரியில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன்.

முக்கியமாக, ரம்ஜான் விழாவில் இதே புதுக் கல்லூரியில் ஒவ்வொரு ஆண்டும் கலந்து கொண்டுள்ளேன். அதுமட்டுமல்ல, நான் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, கல்லூரியில் சேருவதற்கு முதலில் விண்ணப்பித்தது புதுக் கல்லூரியில்தான். அது இங்கு பலருக்குத் தெரியாது. விண்ணப்பித்ததற்காக, இங்கு நான் நேர்காணலிலும் கலந்துகொண்டேன். ஆனால், லயோலா கல்லூரியில் இடம் கிடைத்தவுடன் அங்கு சென்றுவிட்டேன். எனவே, இந்தக் கல்லூரிக்கு அதிக முறை வந்தவன் என்ற பெருமையோடு, இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பை பெற்றுள்ளேன்.

இந்த சிறப்புக்குரிய விழாவில், இஸ்லாமியக் கல்வி நிறுவனங்கள் கூட்டமைப்பின் நிறுவனர், 93 வயதாகின்ற பெரியவர் சமீர் அகமது அவர்களுக்கு `வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்குவதில் நாங்கள் அனைவரும் மிகுந்த பெருமை அடைகிறோம். அவருக்கு எனது வாழ்த்துகள். அவரின் குடும்பத்தினருக்கும் எங்களது நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.




**கல்விச்சேவை பாராட்டத்தக்கது!**

91 வயதிலும் இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பின் தலைவராக, சிறப்பாகச் செயல்படுகின்ற புதுக் கல்லூரியின் முன்னாள் தலைவர் பெரியவர் ஆடிட்டர் முகமத் கலீல் அவர்களுக்கும் இங்கு விருது வழங்கப்பட்டு இருக்கிறது. அவருக்கும், அவரின் குடும்பத்தினருக்கும் எங்களின் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பெரியவர் எஸ்.சாதிக் அவர்களும் இங்கு விருது பெற்றுள்ளார். அவருக்கும் எங்களது வாழ்த்துகள், பாராட்டுகள். அதுமட்டுமல்லாமல், 12 இஸ்லாமிய கல்வி அறிஞர்கள் உட்பட 13 ஆளுமைகளுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்குவதில் நாங்கள் மிகுந்த பெருமை அடைகிறோம்.

ஒரு கல்வி நிறுவனத்தை நடத்துவது என்பது அவ்வளவு சாதாரணமான விஷயம் இல்லை. ஆனால், நீங்களோ கல்வி நிறுவனங்களுக்கான கூட்டமைப்பையே 50 ஆண்டுகளாக நடத்திக்காட்டி இருக்கிறீர்கள் என்றால் அது உங்களின் உழைப்பிற்கு கிடைத்த வெற்றி. உண்மையிலேயே இது ஒரு சவாலான விஷயம். அதை மிகச் சரியாக, சிறப்பாக நீங்கள் செய்து இருக்கிறீர்கள்.

1974-இல் தொடங்கப்பட்ட இந்த கூட்டமைப்பில் இன்றைக்கு கிட்டத்தட்ட 520 கல்வி நிறுவனங்கள் இருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இஸ்லாமிய கல்வி நிறுவனங்களுக்கான குரலாக நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள். அரசுக்கும், இஸ்லாமிய கல்வி நிறுவனங்களுக்குமான ஒரு பாலமாக உங்களின் அமைப்பு செயல்படுகிறது என்றால் அது மிகையல்ல.

**கற்பிப்பதே சிறந்த தானம்**

பல சமயங்களில் இஸ்லாமிய கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமல்ல, பிற கல்வி நிறுவனங்களின் உரிமைக்கு குரல் கொடுப்பதும் நீங்கள்தான் என்றுச் சொன்னால் அதுவும் மிகையாகாது. நபிகள் நாயகம் கூறிய வாழ்க்கை நெறிமுறைகளில், முக்கியமான ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கற்பவனாக இரு அல்லது கற்பிப்பவனாக இரு அல்லது கற்பிப்பவர்களுக்கு உதவி செய்பவனாக இரு. இந்த மூன்றையும் தவிர நான்காவது நபராக கண்டிப்பாக இருந்து விடாதே என்பதுதான் நபிகள் நாயகம் அவர்கள் சொன்ன வார்த்தை. ஒரு முஸ்லிம் தானும் கல்வி கற்று, பிறருக்கும் கல்வி கற்றுக் கொடுப்பதே தான தர்மங்களில் சிறந்ததாகும் என்று நபிகள் நாயகம் கூறியிருக்கிறார்.

எல்லோருக்கும் கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்று நபிகள் சொன்னார்கள். அதைத்தான் நம் திராவிட முன்னேற்றக் கழகமும் தொடர்ந்து இந்த மண்ணிலே சொல்லி வருகிறது, செய்து வருகிறது. இப்போதுகூட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்கத்தான் நம் திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து பாடுபட்டுக்கொண்டு இருக்கிறது. தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியில், இஸ்லாமிய, கிறிஸ்துவ கல்வி நிறுவனங்களின் பங்கு மிகப்பெரியது. அந்த வரிசையில் இன்றைக்கு இந்த புதுக் கல்லூரி, காயிதே மில்லத் கல்லூரி, ஜமால் முகமது கல்லூரி இப்படி நிறைய கல்லூரிகளின் பெயரை நாம் சொல்லிக் கொண்டே போகலாம்.

**பாசிசத்தை எதிர்த்து சேவை!**

தமிழ்நாட்டின் கல்விக்கு கிடைத்த மாபெரும் கொடையாகத் திகழும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு களங்கம் ஏற்படுத்த பாசிச கூட்டம் அவதூறுகளையும், வதந்திகளையும் தொடர்ந்து பரப்பி வருகிறது. இதுபோன்ற சவால்களை எல்லாம் எதிர்கொண்டுதான் இப்போதும் இந்த சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் தொடர்ந்து சிறப்பாக கல்வி சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இதற்காக உங்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும், எவ்வளவு பாராட்டினாலும் அது போதாது.

**கழகத்தின் வரலாறு அப்படியானது!**

இந்த கல்வி நிறுவனங்களில் படித்து, வாழ்க்கையில் உயர்ந்த நிலையில் இருக்கின்ற இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு, நம் கல்வி நிறுவனங்களின் முக்கியத்துவம் நிச்சயம் தெரியும். இப்படி சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் ஆற்றி வரும் கல்விச் சேவையை அங்கீகரிக்கின்ற வகையில்தான் திராவிட மாடல் அரசின், நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு, ஒரு அறிவிப்பை வெளியிட்டார். பொதுவாக, நம் ஆட்சி வருவதற்கு முன்பாக மாநில அரசால் சிறுபான்மையினர்கல்விநிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற 'ரிலீஜியஸ் மைனாரிட்டி' சான்றிதழை ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் புதுப்பிக்க வேண்டும். உங்களின் கோரிக்கையை ஏற்று, அந்த நிலையை மாற்றி அதை நிரந்தரச் சான்றிதழாக வழங்கிய பெருமை நம் திராவிட மாடல் அரசிற்கும், நம் மாண்புமிகு முதலமைச்சருக்கும் உண்டு.

இஸ்லாமிய மக்கள் கல்வி கற்று, வேலைவாய்ப்பும் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இஸ்லாமிய மக்களுக்கு 3.5% உள் இட ஒதுக்கீட்டினை வழங்கினார்கள். 'எல்லோருக்கும் எல்லாம்' என்கின்ற அந்த உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில் நடக்கும் அரசுதான் நம் திராவிட மாடல் அரசு. ஆனால், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கக்கூடாது என்று நினைப்பவர்கள் நம் திராவிட மாடல் அரசிற்கு பல நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, இப்போது மாநில அரசின் அனுமதி இல்லாமல் ஒன்றிய அரசே பல்கலைக் கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமிக்கலாம் என்ற ஒரு வரைவை யு.ஜி.சி. மூலம் கொண்டுவர திட்டமிட்டுள்ளார்கள். இந்த யு.ஜி.சி. விதிமுறைகளுக்கு எதிராகத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நம் முதலமைச்சர் அவர்கள் தீர்மானமே நிறைவேற்றி இருக்கிறார். அதுமட்டுமல்ல, வக்பு வாரிய திருத்த மசோதாவையும் ஒன்றிய அரசு கொண்டு வர முயற்சிக்கிறார்கள். பாராளுமன்ற கூட்டுக்குழுவில் நம் கழகக் கூட்டணி எம்.பி.க்கள் இதை எதிர்த்து தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்கள். அதனால் கிட்டத்தட்ட 10 எம்.பி.க்களை என்ன, ஏது என்று கேட்காமலே பா.ஜ.க ஒன்றிய அரசு தற்காலிக இடை நீக்கமும் செய்து இருக்கிறது. ஆனாலும், நம் முதலமைச்சர் அவர்கள் இஸ்லாமிய மக்களை பாதிக்கின்ற, அந்த முடிவை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று உறுதியோடு செயல்பட்டு வருகிறார். ஏனென்றால், கழகத்தின் வரலாறு அப்படி.

**கலைஞர் செய்த அரும்பணிகள்!**

பெரியவர் காயிதே மில்லத் காலத்திலிருந்தே கழகமும், இஸ்லாமிய மக்களும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து ஓர் உறவை நாம் கொண்டிருக்கிறோம்.

பிறை கொடி இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும், கருப்பு-சிவப்புக் கொடியும் பறக்கும் என்பது உங்கள் அத்தனைப்பேருக்கும் தெரியும். கழக ஆட்சியின் போதெல்லாம் இஸ்லாமிய மக்களுக்கான திட்டங்களைப் பார்த்து, பார்த்து நம் முதலமைச்சர் அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞரும் செய்து இருக்கிறார்கள். 1973-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருது பேசும் முஸ்லிம்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று உடனே அரசாணையை பிறப்பித்தார்கள்.

2007-ஆம் ஆணடு முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது தான் சிறுபான்மையினர் நல இயக்குநரகம் உருவாக்கப்பட்டது. 2009-ஆம் ஆண்டில் கழக ஆட்சி காலத்தில்தான் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசினர் மகளிர் கல்லூரிக்கு கயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி எனப் பெயர் சூட்டியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதேபோல் மிலாடி நபிக்கு அரசு விடுமுறை வழங்கியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். சென்னை பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய ஆய்வு மையத்தை நிறுவியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இப்படி ஏராளமான திட்டங்களை நாம் அடுக்கிக்கொண்டே போகலாம்.

**கழகம் துணை நிற்கும்!**

இந்த நிகழ்ச்சியில் உரிமையோடு பல கோரிக்கைகளை அரசுக்கு நீங்கள் வைத்து இருக்கிறீர்கள். நிச்சயமாக இந்த கோரிக்கைகளை முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நீங்கள் எந்த உரிமையோடு சொன்னீர்களோ, அதே உரிமையோடு நாங்கள் நிறைவேற்றித் தருவோம், நம் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார். நம் திராவிட மாடல் அரசு நிறைவேற்றி தரும் என்ற வாக்குறுதியை இங்கு கொடுக்க விரும்புகிறேன்.

இஸ்லாமிய மக்களின் பாதுகாப்புக்கும், உங்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கும் கழகம் என்றைக்கும் துணை நிற்கும். அயராது பாடுபடும். சிறுபான்மை மக்கள் நீங்களும் நம் முதலமைச்சர் அவர்களுக்கு துணையாக இருக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பு இன்றைக்கு பொன்விழா காண்கிறது. அதன் கல்விச் சேவை இன்னும் பல நூற்றாண்டுகளை காண அன்போடு வாழ்த்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் கோவி.செழியன், வக்பு வாரியத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினரும்தமிழ்நாடுஹஜ்கமிட்டித்தலைவருமான அப்துல் சமது, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநகராட்சி நிலைக்குழுத் தலைவருமான நே. சிற்றரசு, பகுதி கழகச் செயலாளரும் மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவருமான எஸ். மதன்மோகன், இஸ்லாமிய கல்வி நிறுவனங்கள் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் ஆசிம், பொதுச் செயலாளர் அகமத் மீரான், சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் சாதிக், மியாசி அமைப்பின் தலைவர் இம்தியாஸ் பாஷா, செயலாளர் இலியாஸ் சேக், ஆற்காடு நவாப் அப்துல் அலி, ஊடகவியலாளர் தமிழ்க் கேள்வி செந்தில்வேல், த.மு.மு.க. பொதுச் செயலாளர் ஹாஜா கனி, மாமன்ற உறுப்பினர் ஈஸ்வரி வெங்கடேசன், புதுக் கல்லூரி முதல்வர் கமர், அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் பைசன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பாத்திமா முசாபர், பல்வேறு கல்லூரிகளின் பேராசிரியர்கள் மாணவர்கள் உள்பட பலரும் கல்ந்து கொண்டனர்.